செ.வெ எண். 43 நாள்:19.01.2020

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இ.பி.ரோடு நகர்புற ஆரம்ப சுகாதர மையத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்கள் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி ஆகியோர் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமை இன்று 19.01.2020 தொடங்கி வைத்தார்கள்.**

உலகசுகாதார நிறுவனம் மற்றும் மாநிலஅரசின் உதவியுடன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தீவிரபோலியோ சொட்டுமருந்து சிறப்பு முகாம் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

கடந்த 13.01.2011 முதல் இன்று வரை இந்தியாவில் போலியோநோயின் தாக்கம் இல்லை.இதைதொடர்ந்து இந்நிலையினை தக்கவைத்து கொள்வதற்கும், போலியோ நோயை அறவே ஒழிப்பதற்கும் இந்த முறையும் மிகவும் சிரத்தையோடு பல்ஸ் போலியோ சொட்டுமருந்து முகாம் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கிராமப்புறங்களில் **1279** மையங்களிலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் **247** மையங்களிலும்,துறையூர் நகராட்சியில் 20 மையங்களிலும்,மணப்பாறை நகராட்சியில் **23** மையங்களிலும்,மொத்தம் **1569** மையங்களில் சொட்டுமருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து ஆரம்பசுகாதாரநிலையங்கள், துணைசுகாதாரமையங்கள், அங்கன்வாடி மையங்கள்மற்றும் அரசு மருத்துவமனைகளில் பிறந்தகுழந்தை முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படுகிறது. மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அனைத்துநகர் நலமையங்களிலும் போலியோசொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம்,குணசீலம்,சமயபுரம்,வயலூர் ஆகிய கோயில்கள், மசூதிகள் தேவாலயங்கள் மற்றும் அனைத்து பேருந்துநிலையங்கள், இரயில்வேநிலையங்கள், விமானநிலையம்,முக்கொம்பு போன்ற சுற்றுலாத்தலங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து கொடுக்க **55** இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு பெற்றோர்கள் குழந்தைகளை அழைத்துவர இயலாத இடங்களில் அவர்களுக்கு **69** நடமாடும் குழுக்கள் மூலம் போலியோசொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு குழந்தைகளுக்கு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இரயில்வே நிர்வாகத்துடன் இணைந்து திருச்சியிலிருந்து செல்லும் மற்றும் திருச்சிராப்பள்ளி வழியாகச் செல்லும் அனைத்து இரயில்களில் பயணம் செய்யும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோசொட்டு மருந்துகொடுக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் **167469** குழந்தைகளுக்கும் ,நகர்புறங்களில் **97474** குழந்தைகளுக்கும், மேலும் இடம் பெயர்ந்து குடியிருப்போர் குழந்தைகள் **527** பேர்களுக்கும், ஆக மொத்தம் **2,65,470** குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முகாமில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புமருந்துதுறை, அங்கான்வாடி, கல்வித்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் தன்னார்வளர்கள் எனமொத்தம் 6650 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

எனவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே எத்தனை முறை சொட்டுமருந்து கொடுத்திருந்தாலும், தற்போது நடைபெற உள்ள போலியோசொட்டு மருந்து முகாமில் கட்டாயம் சொட்டு மருந்துகொடுப்பது போலியோ நோயிலிருந்து முழு பாதுகாப்பை அளிக்கும். எனவே தாய்மார்கள் அனைவரும் தங்கள் பிறந்த குழந்தை முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதர நிலையம் மற்றும் போலியோ சொட்டுமருந்து மையத்திற்கு அழைத்துச் சென்று . தவறாமல் போலியோ சொட்டுமருந்து போட்டு பயனடைய வேண்டும்.

இம்முகாமில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் திரு சிவசுப்பரமணியன் மாநகராட்சி முதன்மை பொறியாளர் திருமதி அமுதவள்ளி கி.ஆ.பெ.விஸ்வநாதன் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் வனிதா இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மருத்துவர் கோபிநாத் துணை இயக்குநர் சுகாதரப்பணிகள் மருத்துவர் ஆ.சுப்ரமணி மாநகராட்சி நகர் நல அலுவலர் மருத்துவர். ஜெகநாதன் இ.பி.ரோடு நகர் புற ஆரம்ப சுகாதர மருத்துவ அலுவலர் மருத்துவர் திருமதி சுமதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சிராப்பள்ளி.**